


சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், நேற்று (3.5.2025) பல்கலைக்கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் சார்பில் நடைபெற்ற மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பின் சார்பில் வெள்ளியிலான செங்கோல் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழக வேந்தர் ஆசிரியர் கி. வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மேயர் திருமதி ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், ஜெகத்ரட்சகன் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைவர் இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் டெ சண்முகம், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம். காதர் மொஹிதீன், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு தலைவர் முனிரத்தினம், விஐடி பல்கலைக்கழக வேந்தர் விஸ்வநாதன், எஸ்.ஐ.இ.டி. கல்விக் குழுமத்தின் ஆலோசகர் நீதியரசர் அக்பர் அலி, இலயோலா மேலாண்மை கல்லூரி இயக்குநர் அருட்தந்தை அருன், தியாகராசர் கல்வி குழும நிர்வாக இயக்குநர் தியாகராஜன், GRG கல்வி குழுமத்தின் நிறுவனர் டாக்டர் நந்தினி ரங்கசாமி, கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரன், Excel கல்வி குழுமத்தின் நிறுவனத் தலைவர் நடேசன், பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், மேனாள் துணை வேந்தர்கள், கல்வியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







முதலமைச்சர் . மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், பல்கலைக்கழகங்கள், சுயநிதி பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு, தனியார் கலைக் கல்லூரிகள் கூட்டமைப்பு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளின் சார்பில் மாநில சுயாட்சி நாயகருக்கு மகத்தான பாராட்டு விழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.


